


ஆர்.கே.நகர் தொகுதி வினோபா நகர் பகுதியில் ஏழை எளியவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பாடுபட்ட கர்ம வீரர் கு.காமராஜர் அவர்களின் 123வது பிறந்தநாளை முன்னிட்டு, ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் சொந்த நிதியிலிருந்து காமராஜர் அவர்களின் முழுவுருவ சிலையை நிறுவியுள்ளார். இச்சிலையை தமிழ்நாடு பனைமர தொழிலாளர் நலவாரிய தலைவர் எர்ணாவூர் ஏ.நாராயணன், சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் ஆகியோர் திறந்து வைத்து, பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினர். இந்நிகழ்வில் பகுதி கழக செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், இரா.லட்சுமணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.,கலாநிதி வீராசாமி எம்.பி. முன்னிலை! ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்,

# ஆர்.கே.நகரில் கர்மவீரர் காமராஜர் சிலை சிறப்பு விழா!

### எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், இரா.லட்சுமணன் வரவேற்பு! எர்ணாவூர் ஏ.நாராயணன் பங்கேற்பு!

சென்னை,ஜுலை.18-

ஆர்.கே.நகர் தொகுதி வினோபா நகர் பகுதியில் ஏழை எளியவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பாடுபட்ட கர்ம வீரர் கு.காமராஜர் அவர்களின் 123வது பிறந்த நாளை முன்னிட்டு, ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் சொந்த நிதியிலிருந்து காமராஜர் அவர்களின் முழுவுருவ சிலையை நிறுவியு ள்ளார்.

இச்சிலையை தமிழ்நாடு பனைமர தொழிலாளர் நலவாரிய தலைவர் எர்ணாவூர் ஏ.நாராயணன், சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் ஆகியோர் திறந்து வைத்து, பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினர்.

இந்நிகழ்வில் பகுதி கழக செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், இரா.லட்சுமணன், மண்டலக்குழு தலைவர் நேதாஜி.யு.கணேசன், ஏ.டி.மணி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் இர.பொன் இளவரசன், இ.ரவிக்குமார், பகுதி நிர்வாகிகள் மாஸ். டி.வெங்கடேசன், எம். கோவிந்தராஜ், எம்.லோகநாதன், திராவிடச்செல்வி, பி.ஸ்ரீனிவாசன், என். அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, வேதலஷ்மி, கே.பி.சதீஷ்குமார், வட்ட செயலாளர்கள் கே.தேவன், ஆர்.ஏ.எம்.சசிகுமார், ஜி. ஏழுமலை, ஆர்.ராஜன், எம். நாகராஜன், ச.தமிழ்செல்வன், ப.குமார், ந.கோதண்டம், மாமன்ற உறுப்பினர் குமாரி நாகராஜன், எழில் நகர் பகுதி அனைத்து வியாபாரிகள் முன்னேற்ற சங்கம், சுதேசி வியாபாரிகள் சங்கம், கொருக்குப்பேட்டை சுற்றுவட்டார வியாபாரிகள் சங்கம், குமரன் நகர் சுற்று வட்டார வியாபாரிகள் சங்கம், நேதாஜி சூப்பர் மார்க்கெட் வியாபாரிகள் சங்கம், நேதாஜி நகர் சுற்றுவட்டார அனைத்து வியாபாரிகள் சங்கம், நேதாஜி நகர் பகுதி வியாபாரிகள் சங்கம், தமிழ்நாடு அட்டைப்பட்டி வியாபாரிகள் சங்கம், ஆர்கேநகர் பகுதி மணலி சாலை சுற்று வட்டார வியாபாரிகள் சங்கம், கொருக்குப்பேட்டை வியாபாரிகள் சங்கம்,

ஜே.ஜே. நகர் வியாபாரிகள் சங்கம், எழில் நகர்பகுதி சுற்றுவட்டார வியாபாரிகள் சங்கம், எழில் நகர் பகுதி நாடார் உறவின் முறை சங்கம், ரணகூர் நாயக்கன்பட்டி நாடார் உறவின்முறை சங்கம், வட சென்னை கம்மவார் நாயுடு நல சங்கம், குருவன்கோட்டை நாடார் உறவின் முறை சங்கம், கிங் மேக்கர் காமராஜர் குரூப்ஸ், தண்டையார்பேட்டை சுற்று வட்டார சங்கம், காமராஜர் நற்பணி இயக்கம் ஆகிய சங்கங்களின் நிர்வாகிகள், கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

இறுதியாக 38அ வட்ட செயலாளர் எஸ்.எல். சுந்தர் நன்றிரை ஆற்றினார்.

# நாமக்கல் மாவட்டத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்!

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!

நாமக்கல், ஜுலை. 18-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க .ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில், “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமைத் தொடங்கி வைத்து, துறை சார்ந்த அரங்கில் மனுக்கள் பதிவு செய்வதைப் பார்வையிட்டு, மனுதாரர்களுடன் கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து, நாமக்கல் மாவட்டம் சின்ன முதலைப்பட்டி , பொட்டணம் பாச்சல் ஆகிய பகுதிகளில் ”உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் துவக்க விழா நடைபெற்றது. நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, தலைமை தாங்கினார். நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ். மாதேஸ்வரன், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் , கு.பொன்னுசாமி மேயர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், ,மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர். என்.ராஜேஸ்குமார் கலந்து கொண்டு ”உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமைத் தொடங்கி வைத்து, துறை சார்ந்த அரங்கில் மனுக்கள் பதிவு செய்வதைப் பார்வையிட்டு, பயனாளிகளுக்கு உடனடித் தீர்வாக அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் “உங்களுடன் ஸ்டாலின்” என்ற திட்டத்தினை கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் தொடங்கி வைத்துள்ளார். அதனடிப்படையில், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் மக்களின் குறைகளை தீர்க்கும் வகையில், உங்களின் வீட்டிற்கே வந்து, கேட்டறிந்து தீர்வு காணும் “உங்களுடன் ஸ்டாலின்” என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

**நாமக்கல் மாவட்டத்தில் 238 சிறப்பு முகாம்கள்!**

இத்திட்டத்தின் கீழ் நாமக்கல் மாவட்டத்தில் மொத்தம் 238 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளது. இந்த முகாம்களில் நகர்ப்புறபகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்படும். அத்துடன் முகாம்களுக்கு வருகைதரும் பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில் மருத்துவ சேவைகளை வழங்க மருத்துவ முகாம்களும் நடத்தப்படும்.

அதனடிப்படையில் நாமக்கல் மாநகராட்சி சின்னமுதலைப்பட்டியில் நடைபெறும் முகாமில், முகாம் தொடங்கிய 1 மணி நேரத்தில் ஏறத்தாழ 600க்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டுள்ளது. . கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கான விண்ணப்பங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, ஆய்விற்கு எடுத்து கொள்ளப்படும் என்றார். தொடர்ந்து

மனுக்கள் அளித்த பயனாளிகளுக்கு உடனடி தீர்வாக சாதி சான்றிதழ், வருமான சான்றிதழ், மருத்துவக் காப்பீட்டு அட்டை ஆகியவற்றினை வழங்கினார்.

இம்முகாமில், மாநகராட்சி ஆணையாளர் க.சிவக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், மாவட்ட வருவாய் அலுவலர் (சிப்காட்) மா.க.சரவணன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.வடிவேல், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) கு.செல்வராசு, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ச.பிரபாகரன், உதவி ஆணையர் (தொழிலாளர் நல வாரியம்) இந்தியா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் 1, வார்டு 9,10, வெங்கமேடு பகுதியில் உள்ள ஜெகா கார்டன் திருமண மண்டபத்தில் ”உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமில் மாநகராட்சி மேயர், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் ஆகியோர் பார்வையிட்டனர். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், துணை மேயர் ரா.பாலசுப்ரமணியம், 1வது மண்டல தலைவர் வெ.உமாமகேஸ்வரி, வட்டக் கழக பொறுப்பாளர்கள் சி.மகேந்திரன், ஸ்ரீதர், மாமன்ற உறுப்பினர்கள் என்.பத்மாவதி, பா.பிரேமலதா, மாநகர நல அலுவலர் மரு.முருகானந்த், துணை ஆணையாளர் சுந்தரராஜன், உதவி ஆணையாளர் (மண்டலம்1) கணேஷ்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை பணிகளுக்காக எழும்பூர் தெற்கு பகுதி 108,108அ ஆகிய வட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நேற்று 17.7.2025 மாலை 7.00, மணியளவில் சென்னை, சேத்துப்பட்டு வ.உ.சி. மன்றத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான பி.கே. சேகர்பாபு ஆலோசனைகள் வழங்கினார். இக்கூட்டத்தில் எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி. சுதாகர், தொகுதி பார்வையாளர் பி. எம். யாழினி, தமிழன் பிரசன்னா, கே எஸ் ரவிச்சந்திரன், கே.எஸ்.எம் நாதன், வட்டக் கழக செயலாளர்கள் எல்.சுந்தர்ராஜன் எம்.சி., வான்மதி கதிரவன், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வெற்றி மற்றும் பி.எல்.ஏ.2, பிடிஏ,பி.ஒய்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### திருவண்ணாமலை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.என்.அண்ணாதுரை எம்.பி. அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு திருவண்ணாமலை தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 18.07.2025 | திருவண்ணாமலை மாநகரம் (வார்டு – 1, 2, 3 பகுதி) | அம்பேத்கர் தெரு | கந்திலி கரிகாலன் இரா.கருணாநிதி |
| 2 | | திருவண்ணாமலை மத்திய ஒன்றியம் | அரடாப்பட்டு | கந்திலி கரிகாலன் இரா.கருணாநிதி |
| 3 | | திருவண்ணாமலை மேற்கு ஒன்றியம் | செட்டிப்பட்டு | சேலம் சுஜாதா லோ.ராதிகா |
| 4 | | தண்டராம்பட்டு கிழக்கு ஒன்றியம் | சிறுப்பாக்கம் | சேலம் சுஜாதா லோ.ராதிகா |
| 5 | 19.07.2025 | தண்டராம்பட்டு மேற்கு ஒன்றியம் | வேப்பூர் செக்கடி | கந்திலி கரிகாலன் மா.பூபதி |
| 6 | | தண்டராம்பட்டு மத்தியம் ஒன்றியம் | சாத்தனூர் | கந்திலி கரிகாலன் மா.பூபதி |
| 7 | | செங்கம் கிழக்கு ஒன்றியம் | கன்னாங்குறிக்கை | மதன்குமார் லோ.ராதிகா |
| 8 | | செங்கம் மத்திய ஒன்றியம் | பரமனந்தல் | மதன்குமார் லோ.ராதிகா |
| 9 | | செங்கம் மேற்கு ஒன்றியம் | மேல் பள்ளிப்பட்டு | மதன்குமார் லோ.ராதிகா |
| 10 | | ஜவ்வாது மலை தெற்கு ஒன்றியம் | கல்லாத்தூர் | சேலம் சுஜாதா அ.தமிழரசி |
| 11 | | செங்கம் நகரம் | தோக்கவாடி | சேலம் சுஜாதா அ.தமிழரசி |
| 12 | 20.07.2025 | திருவண்ணாமலை கிழக்கு ஒன்றியம் | தண்டரை ஊராட்சி | சேலம் சுஜாதா லோ.ராதிகா |
| 13 | | வேட்டவலம் பேரூர் | பேருந்து நிறுத்தம் அருகில் | சேலம் சுஜாதா லோ.ராதிகா |
| 14 | | கீழ்பென்னாத்தூர் வடக்கு ஒன்றியம் | சாணி பூண்டி | மதன்குமார் அ.தமிழரசி |
| 15 | | கீழ்பென்னாத்தூர் தெற்கு ஒன்றியம் | ஆவூர் | மதன்குமார் அ.தமிழரசி |
| 16 | | கீழ்பென்னாத்தூர் பேரூர் | பேருந்து நிலையம் | மதன்குமார் அ.தமிழரசி |
| 17 | | துரிஞ்சாபுரம் கிழக்கு ஒன்றியம் | சேரியந்தல் | கந்திலி கரிகாலன் வி.ஜாஸ்மின் சுவேதா |
| 18 | | துரிஞ்சாபுரம் மேற்கு ஒன்றியம் | மல்லவாடி | கந்திலி கரிகாலன் வி.ஜாஸ்மின் சுவேதா |
| 19 | 21.07.2025 | கலசப்பாக்கம் கிழக்கு ஒன்றியம் | கலசப்பாக்கம் ஊராட்சி | மதன்குமார் லோ.ராதிகா |
| 20 | | கலசப்பாக்கம் மேற்கு ஒன்றியம் | மேல்சோழங்குப்பம் ஊராட்சி | மதன்குமார் லோ.ராதிகா |
| 21 | | புதுப்பாளையம் கிழக்கு ஒன்றியம் | காஞ்சி ஊராட்சி | சேலம் சுஜாதா மேகநாதன் |
| 22 | | புதுப்பாளையம் மேற்கு ஒன்றியம் | காரப்பட்டு ஊராட்சி | சேலம் சுஜாதா மேகநாதன் |
| 23 | | புதுப்பாளையம் பேரூர் | புதுப்பாளையம் பேரூர் | சேலம் சுஜாதா மேகநாதன் |
| 24 | | ஜவ்வாதுமலை வடக்கு ஒன்றியம் | கோவிலூர் ஊராட்சி | மங்கலம் பிரபாகரன் |
| 25 | | போளூர் வடக்கு ஒன்றியம் | படவேடு ஊராட்சி | மங்கலம் பிரபாகரன் |

**திருவண்ணாமலை**

நாள் : 17.07.2025

கலைஞர் 100 1924 - 2023

